

## நான் எங்கே தொடங்க வேண்டும்?

நோய் ஆதரவு சிகிச்சை உரையாடல்களுடன் தொடங்குகிறது. இன்று இந்த முக்கியமான வாழ்க்கை தொடர்பான தலைப்புகள் குறித்த உங்கள் எண்ணங்களை உங்கள் அன்புக்குரியவர்கள் அறிந்துகொள்ளும்படி செய்யுங்கள்:

- உறவுகள்
- நிதிகள்
- தனிப்பட்ட நம்பிக்கைகள்
- பராமரிப்பு முன்னுரிமைகள்
- இறப்பு

ஒரு மோசமான நோயை ஆரம்பக்கட்டத்தில் கண்டறியும் போதே நோய் ஆதரவு சிகிச்சை குறித்து உங்கள் மருத்துவருடன் கலந்துரையாடுங்கள். நோய் அறிகுறிகளைக் கட்டுப்படுத்துவதற்கான உங்களுடைய தற்போதைய சிகிச்சையுடன் இணைந்து நோய் ஆதரவு சிகிச்சையை மேற்கொள்ள முடியும். நோய் முற்றிய நிலையில், உங்கள் மருத்துவரின் அறிவுரையைப் பெறவும் மற்றும் தேவைப்பட்டால் நோய் ஆதரவு சிகிச்சைக்கான பரிந்துரையைப் பெறவும்.

நோயின் கடைசிக் கட்டத்தில் மட்டுமே நோய் ஆதரவு சிகிச்சை அளிக்கப்படமாட்டாது. நோயாளியின் மதிப்பீடுகள், நம்பிக்கைகள் மற்றும் பராமரிப்பு நோக்கங்கள் மற்றும் அவற்றை அடைவதற்கான பணிகள் ஆகியவை குறித்து கலந்துரையாட போதுமான நேரம் இருக்கும்போது நோய் ஆதரவு சிகிச்சை மிகவும் செயல்திறன் வாய்ந்ததாக அமைகிறது.

## மேலும் அதிகத் தகவல்களை நான் எங்கே பெறமுடியும்?


**சிங்கப்பூர் ஹாஸ்பைஸ் கவுன்சில்**

**SINGAPORE HOSPICE COUNCIL**

535 Kallang Bahru #03-09
GB Point Singapore 339351
**Tel** +65 6538 2231
**Email** info@singaporehospice.org.sg
**Web** www.singaporehospice.org.sg


LIVE Leave WELL

வழங்குபவர்கள்:

SINGAPORE HOSPICE COUNCIL

வாழ்க வளமுடன். விடை பெறுக நலமுடன்

மிகவும் சமீபத்திய புதுப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு தயவுசெய்து எங்களுடைய இணையதளத்தைப் பார்க்கவும்.

052018-032020

SINGAPORE HOSPICE COUNCIL

*Living before Leaving*

# நோய் ஆதரவு சிகிச்சை:

## நீங்கள் என்ன அறிந்து கொள்ள வேண்டும்



## நோய் ஆதரவு சிகிச்சை ஏன் தேவைப்படுகிறது?

உங்கள் அன்புகுரியவர் ஒருவருக்கு உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் நோய் இருப்பதாக கண்டறியப்பட்டால், அந்த நோய் தீவிரமடையும் போது எழும் சிக்கலான நிலைமைகளை மேலாண்மை செய்ய அவருக்கு நீண்ட கால பராமரிப்பும் ஆதரவும் தேவைப்படுகின்றன.

நோய் ஆதரவு சிகிச்சையானது "ஒட்டுமொத்த நபருக்கும்" உடல்ரீதியாக, உணர்வு ரீதியாக, மனரீதியாக மற்றும் ஆன்மீக ரீதியாக பராமரிப்பு அளிப்பதன் மூலம் நோயாளியின் மற்றும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களின் துன்பத்தை துடைத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகிறது. நோய் ஆதரவு சிகிச்சையானது சிகிச்சை காலம் முழுவதும் நோயாளிக்குப் பராமரிப்பு அளிக்கிறது.

சிங்கப்பூரில் "நோய் ஆதரவு சிகிச்சை" மற்றும் "அந்திமக் காலப் பராமரிப்பு" ஆகிய இரு சொற்றொடர்களும் ஒரே மாதிரியான அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

## நோய் ஆதரவு சிகிச்சையானது எவ்வாறு உதவிடக்கூடும்?

நோய் ஆதரவு சிகிச்சையானது பின்வருபவை மூலம் ஆறுதலையும், குணப்படுத்துதலையும் வழங்குகிறது:

- வலி மற்றும் அறிகுறிகளைக் கட்டுப்படுத்துதல்
- நிதி சார்ந்த கலந்தாலோசனை
- உணர்வு ரீதியான ஆதரவு
- துக்கத்திலும், உயிரிழப்பிலும் ஆதரவு
- கலந்தாலோசனை
- பராமரிப்பு அளிப்பவருக்கான பயிற்சி
- நோயாளியின் பராமரிப்பு நோக்கங்களை அடைவதற்கான உரையாடல்களை நடத்துதல்
- சிக்கலான முடிவுகளை எடுப்பதிலும், திட்டமிடுதலிலும் குடும்பத்திற்கான வழிகாட்டுதல்

மருத்துவர்கள், தாதியர்கள், சமூக சேவகர்கள், சிகிச்சையாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் பயிற்சி பெற்ற தன்னார்வலர்கள் ஆகியோர் அடங்கிய பல்துறைக்குழு இச்சேவைகளை அளிக்கும்.



## நோய் ஆதரவு சிகிச்சையின் மூலம் யார் பயன் பெற முடியும்?

பின்வரும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் நோய்கள் கொண்ட குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரையிலான அனைத்து வயது நோயாளிகளும் நோய் ஆதரவு சிகிச்சை மூலம் பயன்பெறமுடியும்:

- முற்றிய புற்றுநோய்
- நோய் முற்றிய நிலையில் உள்ள சிறுநீரகம், இதயம் மற்றும் மூளை மற்றும் நரம்பியல் செயலிழப்பு உள்ளிட்ட நாட்பட்ட நோய்கள்.

## நோய் ஆதரவு சிகிச்சை எங்கு அளிக்கப்படுகிறது?

ஒவ்வொரு நோயாளியின் தேவைகளையும் பூர்த்திசெய்யும் விதத்தில் நோய் ஆதரவு சிகிச்சை வீட்டிலும், தாதிமை இல்லங்களிலும், அந்திமக்கால பராமரிப்பு மையங்களிலும், சிறப்பு மருத்துவமனைகளிலும், பொது மற்றும் சமூக மருத்துவமனைகளிலும் அளிக்கப்படுகிறது. அளிக்கப்படும் சேவைகளில் வீட்டுப்பராமரிப்பு, பகல் நேரப் பாராமரிப்பு, உள்நோயாளிப் பராமரிப்பு மற்றும் ஆலோசனை சேவைகள் ஆகியவை உள்ளடங்குகின்றன.

## நோய் ஆதரவு சிகிச்சையை நான் எவ்வாறு பெறமுடியும்?

ஒரு நோய் ஆதரவு சிகிச்சைக்கான பரிந்துரையை உங்கள் மருத்துவரால் வழங்க முடியும். உங்களுக்கு அல்லது உங்கள் அன்புக்குரியவர்களுக்கு மிகவும் பொருத்தமான நோய் ஆதரவு சிகிச்சை தொடர்பான சேவைகள் குறித்து உங்கள் மருத்துவரிடம் அறிவுரையைப் பெறவும்.

## நோய் ஆதரவு சிகிச்சை தொடர்பான சேவைகள் எவ்வாறு மலிவான கட்டணத்தில் அளிக்கப்படுகின்றன?

பல்வேறு மானியங்கள் மற்றும் நிதித் திட்டங்கள் மூலம் இதற்கான கட்டணங்கள் மலிவாக நிர்ணயிக்கப்படுகின்றன.

பணவசதிச் சோதனை மூலம் அரசு மானியம் அளிக்கப்படுகிறது. ஒரு நபரின் மாதாந்திர வீட்டு வருமானத்தின் அடிப்படையில் மானியத்தின் அளவு தீர்மானிக்கப்படுகிறது. கூடுதலாக, நோய் ஆதரவு சிகிச்சை தொடர்பான சேவைகளுக்கு மெடிசேவையும் பயன்படுத்த முடியும்.

தயவுசெய்து உங்களுக்கு உடல்நலப்பராமரிப்பு அளிப்பவரிடம் அறிவுரையைப் பெறுங்கள். ஏதேனும் நிதி சார்ந்த கவலைகள் உங்களுக்கு இருந்தால், ஒரு சமூக சேவகரிடம் பேசுமாறு கேட்கவும்.

